**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-11012026-11250

Volume: 11

Issue: 1

Month: July

Year: 2026

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 26.05.2026

Accepted: 20.06.2026

Published: 01.07.2026

Citation:
Boomiselvam, A. (2026). The Weaving of Classical Elements in Early Tamil Novels. *Shanlax International Journal of Tamil Research, 11*(1), 11–22.

DOI:
https://doi.org/10.34293/tamil.v11i1.11250

*Corresponding Author:
boomiselvam@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# The Weaving of Classical Elements in Early Tamil Novels

**A. Boomiselvam**
*Head (SF) & Associate Professor, Post Graduate & Research Department of Tamil*
*The American College, Madurai, Tamil Nadu*
*http://orcid.org/0000-0002-1820-922X*

**Abstract**

*Whether they are works of art and literature or texts grounded in philosophy and theory, all such creations embody the essence of human existence. It is an undeniable reality that human existence adapts to the political, social, and economic changes it encounters. Internal psychological factors and external influences invariably play a significant role in this process of adaptation. In this context, readers require a framework to approach and observe creative works that encapsulate these elements, as well as to share and examine their reading experiences with others. Furthermore, approaching specific creative works often necessitates a defined analytical framework. Accordingly, the central focus of this article is to identify the classical elements interwoven within early novels.*

***Keywords:*** *Classical, Art and Literature, Theory, Internal Psychological Factor, Creativity, Traditionalism, Typical.*

**References**

1. Pa. Ra. Subramaniyan (Ed.), Kriyavin Tharkaala Tamil Agarathi (Kriya's Dictionary of Contemporary Tamil), Kriya, Chennai-14, First Edition - 1992, p.381.
2. Wikipedia+2.
3. Pa. Anandakumar, Bharathiyar – Asan – Apparau Kavithaigalil Punaiviyal (Poetics in the Poems of Bharathiyar, Asan and Apparau), Muthu Meena Padhippagam, Madurai-1, First Edition - May 2000, p.82.
4. Sevviyal Vatham (Classicism) - Google Search.
5. Vai. Sachithanandam, Melai Ilakkiya Sollagarathi (Dictionary of Western Literary Terms), Macmillan, Chennai, First Edition - 1983, p.35.
6. M.G. Suresh, Isangal Aayiram (A Thousand Isms), Puthanathham, Trichy, First Edition, 2005, p.34.
7. Na. Pichaimuthu, Ilakkiya Iyakkangal (Literary Movements), Sakthi Puthaga Nilayam, Chennai-05, Third Edition - 2006, p.20.
8. Aranga. Subbaiah, Ilakkiyath Thiranaaivu – Isangal, Kolkaigal (Literary Criticism – Isms, Theories), Pavai Publications, Chennai-14, Eighth Edition, July - 2016, p.318.
9. Siva. Mangaiyarkkarasi, Ilakkiya Iyakkangal – Tamil Ilakkiyathin Samooga Varalaaru (Literary Movements – Social History of Tamil Literature), New Century Book House, Chennai-98, First Edition, April 2004, p.13.
10. Sa. Agathiyalingam, Sangam Ilakkiyangal Sevviyal Ilakkiyangale (Sangam Literature is Classical Literature), Manvasagar Padhippagam, Chennai-17, Year of Publication 2000, p.85.
11. Siva. Mangaiyarkkarasi, op. cit., p.15.

12. Mayuram Vedanayagam Pillai, Prathaaba Mudhaliyar Charithiram, Sandhya Padhippagam, Chennai-83, First Edition, December - 2004, p.298.
13. Ibid., p.79.
14. Dr. Mu. Varadarajan, Agal Vilakku, Pari Nilayam, Chennai-13, Ninth Edition - 1995, p.404.
15. Na. Parthasarathy, Kurinji Malar, Tamil Puthagalayam, Chennai-17, Twentieth Edition, May - 2004, p.6.
16. Ibid., pp.82-86.

# தொடக்க காலத் தமிழ் நாவல்களில் செவ்வியல் கூறுகளின் இழைவுகள்

***ஆ. பூமிச்செல்வம்***
இணைப் பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்
அமெரிக்கன் கல்லூரி, மதுரை

***ஆய்வுச் சுருக்கம்***
*எவ்வொரு கலை – இலக்கியப் பிரதிகளானாலும் சரி; தத்துவ – கோட்பாடு ரீதியிலான பனுவல்களானலும் சரி, மனித வாழ்நிலைகளின் சாரங்களையே அவை உள்வாங்கி அமைந்திருக்கும். மனித வாழ்நிலையானது அது எதிர்கொள்ள நேருகிற அரசியல், சமூக, பொருளாதார மாற்றங்களுக்கு ஏற்பத் தகவமைகிற தன்மை கொண்டது என்பதுதான் நிதர்சனம். இவ்விதத் தகவமைவில் அகமனக் காரணிகளும் புறமனத் தாக்கங்களும் எப்பொழுதும் அவற்றுள் உரிய பங்களிப்பைச் செலுத்தவே செய்யும். இச்சூழலில்தான், இத்தகு தன்மைகளையெல்லாம் உள்வாங்கிப் படைப்பாக்கம் பெற்றிடும் கலை – இலக்கியப் பிரதிகளை அணுகவும், அவதானிக்கவும், தம் வாசிப்பவனுபவங்களைப் பிறரிடத்துப் பகிர்ந்து, பரிசோதிக்கவும் எவ்வொரு வாசகருக்கும் ஒருவித வழிவகை வேண்டியதாயிருக்கிறது. இத்துடன், குறிப்பிட்ட சில படைப்பாக்கங்களை அணுகுவதற்கு ஏதேனும் ஒரு வரையறுக்கப்பட்ட சட்டகமும் கூடத் தேவைப்படலாகிறது. அவ்வகையில் தொடக்க கால நாவல்களில் இழையோடு செவ்வியல் கூறுகளைக் கண்டறிவதாக இக்கட்டுரையின் மையப் பொருள் அமைந்துள்ளது.*

***திறவுச் சொற்கள்:*** *செவ்வியல், கலை – இலக்கியம், கோட்பாடு, அகமனக் காரணி, படைப்பூக்கம், மரபியல்வாதம், வகைமாதிரி.*

## தொடக்கமாக

காலகாலமும் படைப்பிலக்கியங்களின் உருவம், உள்ளடக்கம், உத்தி முறைகள் என்பன தொடர்ந்து பல மாற்றங்களைப் பெற்று வருவதென்பது வெளிப்படை. இவ்வித மாறுதல்களுக்குக் காலத்தின் தேவை, புதியன நாடுதலில் ஈர்ப்பு, புறச் சூழலின் தாக்கம் உள்ளிட்ட சில காரணிகளே பெரிதும் பின்புலங்களாக அமைவதுண்டு. பொதுவாக, எவ்வொரு படைப்பிலக்கியம் எனினும் அது மானிட வாழ்நிலையின் பிரதிபலிப்பாகவே பெரிதும் அமையும். மானுட வாழ்க்கையானது அது எதிர்கொள்ள நேருகிற அரசியல், சமூக, பொருளாதார மாற்றங்களுக்கு ஏற்பத் தகவமைகிற தன்மை கொண்டது. இவ்விதத் தகவமைவில் அகமனக் காரணிகளும் புறவயத் தாக்கங்களும் எப்பொழுதும் உரிய தம் பங்களிப்புகளைச் செலுத்தவே செய்யும். இச்சூழலில், இத்தகுத் தன்மைகளையெல்லாம் உள்வாங்கிப் படைப்பாக்கம் பெற்றிடும் பிரதிகளை அணுகவும், அவதானிக்கவும், தம் வாசிப்பு அனுபவங்களைப் பிறரிடத்துப் பகிர்ந்து கொள்ளவும் எவ்வொரு வாசகருக்கும் ஒருவித வழிவகை வேண்டியதாகிறது. இந்நிலையில், குறிப்பிட்ட படைப் பாக்கங்களை அணுகுவதற்கு ஏதேனும் ஒரு வரையறுக்கப்பட்ட சட்டகம் என்பது தேவைப்படலாகிறது. அவ்விதச் சட்டகமானது அப்படைப்பிலக்கியத்தினுடைய உருவத்தை வடிவமைக்க ஒருவித இலக்கண வரையறையாகவும், அதன் உள்ளடக்கத்தைத் தீர்மானிக்க ஏதேனும் ஒரு கொள்கை அல்லது கோட்பாடாகவும்,

உத்திகளை உருவாக்க புதுவித அணுகு முறையாகவும் அமைதல் என்பது இயல்பான ஒன்றாகிறது. இவ்விதப்பட்ட படைப்பாக்க செயல் நிகழ்வுகளில் குறிப்பிட்ட கோட்பாட்டின் தாக்கம் குறித்துப் பார்க்கும் போது அதன் பாதிப்பு அப்படைப்பில் தொழில்படுகிற உருவ, உத்தி வகைகளைக் காட்டிலும் உள்ளடக்கம் சார்ந்த அமைப்பு முறையிலேயே தன்னைப் பெரிதும் நிலை நிறுத்திக் கொள்கிறது எனின் ஏற்க இடமுண்டு.

## இலக்கியப் படைப்புச் செயல்பாட்டில் கோட்பாடு என்பதன் வகிப்பிடம்

பொதுவாக, இலக்கிய உருவாக்கம் என்னும் செயல் நிகழ்வில் படைப்பாளியின் உணர்வு நிலைகளும் வாழ்வனுபவங்களும் சொல்முறைகளும் மொழி எனும் ஊடகத்தைப் பயன்படுத்திக் கொண்டு, குறிப்பிட்டதொரு வடிவில் புனைவு பெற்று, படைப்புப் பிரதியாகப் பரிணமிக்கும். இவ்விதப் பரிணமிப்பில் தாம் உணர்த்திட விரும்புகிற படைப்புநிலையானது ஏதேனும் ஒருசிந்தனாவாக்கத்தின் மறுவடிவமாகவோ அல்லது புதியதொரு சிந்தனையின் ஆக்கமாகவோ கூட அமையும். இவ்விதச் சிந்தனையின் வடிவ ஒழுங்கைப் பொருத்து, அது கொள்கை, கோட்பாடு, தத்துவம் என்கிற பெயரிடல்களைப் பெற்றுக் கொள்ளும். இவ்விடத்து, இலக்கியம் மற்றும் கோட்பாடு என்பது பற்றிப் பேசுமிடத்து, அவை குறித்த வரையைறையைச் சற்று விளங்கிக் கொள்ள வேண்டியதிருக்கிறது. ஒரு துறையில் ஒன்றை விளக்கிட சில கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு, தர்க்கப் பூர்வமாக நிறுவப்படுகிற கூற்று அல்லது கூற்றுக்களின் தொகுப்பையே கோட்பாடு[1] என்பர். இது தகவல்களை ஒருங்கிணைத்து உருவாக்கப்படும் பொது ஊகம் அல்லது கருத்து என்றும் எளிதாக விளக்கம்பெறுவதைக்கருத்தில்கொள்ளுதல் வேண்டும். இவ்விடத்து, இலக்கியக் கோட்பாடு என்பது யாது என வினவின், குறிப்பிட்டதோர் இலக்கியப் படைப்பைப் புரிந்து கொள்ளவும், மதிப்பிடவும், அவற்றின் உள்ளார்ந்த அர்த்தங்களை ஆராயவும் பயன்படுகிறதத்து வார்த்த மற்றும் பகுப்பாய்வு முறைகளே இலக்கியக் கோட்பாடு எனப்படும். இது இலக்கியத்தின் தன்மையை வரையறுப்பதோடு, சமூகம் மற்றும் அரசியல் பின்னணியில் ஒரு படைப்பை அணுகவும் உதவுகிறது.[2] இவ்வித அடிப்படைகளை வைத்துத்தான் உலகளாவிய படைப்பிலக்கியச் சூழலில், செவ்வியல் என்கிற பெயருடன் இயங்கி வருகிற, ஒரு தொடக்க கால இலக்கியக் கோட்பாட்டைத் தேர்ந்து கொண்டு, அதன் உள்வெளித் தளங்களை ஆய்ந்து காண்பதுடன். அதன் இழைவுகளானவை, தொடக்க காலத் தமிழ் நாவல்களில் யாங்ஙனம் ஊடாடியுள்ளன என்று தேடி, சான்றாதாரங்களுடன் புலப்படுத்திட முயல்வதாகவும் இனி வரும் பகுதி அமையலாகிறது.

## செவ்வியல் : சொல் விளக்கம்

'முன்னை மரபியல்' என்னும் பெயரில் கிரேக்க மற்றும் ரோமானிய தேசங்களில் உருப்பெற்ற ஒருவித இலக்கியப் படைப்பாக்கச் சிந்தனையானது, கால நகர்வில் பெற்றுக் கொண்ட பெயர்தான் கிளாசிசம் (செவ்வியல்) என்பது. இதில் இடம்பெற்றுள்ள கிளாசிக் என்னும் சொல்லானது பழங்காலக் கிரேக்க, ரோம இலக்கியங்களைச் சுட்டி அழைப்பதற்கான ஒரு பொதுச் சொல்லாகவே முதலில் பொருள் கொள்ளப்பட்டிருக்கிறது. காலப் போக்கில் கிரேக்க, ரோம இலக்கியங்களைப் போன்றிருக்கிற பிற மொழி இலக்கியங்களையும், மிகத் தரமான உள்ளடக்கம், செறிவான நடையமைப்பு, போற்றத்தக்ககலை அம்சங்களை ஒருங்கே கொண்டிருக்கிற எவ்வொரு தேசத்தைச் சேர்ந்த இலக்கியத்தையும் சுட்டுவதற்கான அடையாளச் சொல்லாகப்

பின்பு இது ஆளப்படலாகியிருக்கிறது. இவ்விதப்பட்ட செவ்வியல் தன்மைகளைத் தன்னகம் கொண்டிருக்கிற ஒரு படைப்பைச் சுட்டவென, உருவாக்கப்பட்ட இச் 'கிளாசிக்' என்னும் சொல்லிலுள்ள 'கிளாஸ்' (Class) என்பது 'மிகத்தரமானது' எனப் பொருள் கொள்ளப்படுகிறது. இவ்வகையில், தரமான தன்மைகளையெல்லாம் ஒருங்கே தன்னுள் உள்வாங்கியிருக்கிற ஒரு பிரதியைச் சுட்டிட 'கிளாசிக்' எனவும் அக் கிளாசிக் தன்மைக் கூறுகளையெல்லாம் ஒன்று கோர்த்து, ஒரு சிந்தனையாக உருமாற்றிய வகையில், அது கிளாசிஸம் என்றும் அழைக்கப்படலாயிற்று.

### செவ்வியல் – வரைவிலக்கணம்

செவ்வியல் என்பது அனைத்துக் கால கட்டங்களிலும் இலக்கிய உலகில் விதந்து பேசப்படுகிற, தனித்துவம் பெற்ற ஒரு கலையிலக்கியக் கோட்பாடாகவே அமைந்திருக்கிறது. இது, உலகப் பொதுவான ஒரு இலக்கியச் சட்டகமாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, தொழிற்படுத்தப்படுவதுடன், உலகளாவிய ஏற்பினை ஒருங்கே பெற்றும், தனித்துவத்துடன் விளங்கியும் வருகிறது. இதன் பொதுவான பண்பு நலன்களாக, தன்னளவில் நிறைவுடைய தன்னை, ஒருமைப்பாட்டு அளவுத்திட்டம், கட்டுப்பாடு, வரிசை முறை கொண்ட அலகுத் தன்மை, தர்க்க அறிவு ஆகிய அம்சங்கள் விளங்குகின்றன.[3]

தொல் பழங்காலக் கிரேக்க, ரோம இலக்கியங்களின் தன்மை நலன்களானவை, மரபின் வெளிப்பாடு, செறிவான உருவம், திட்டமிட்டுக்கட்டமைக்கப்பட்ட வடிவம், சமுதாய மேம்பாடு, மிகைப்படுத்தப்படாத உணர்ச்சி வெளிப்பாட்டுத் திறன்கள், அறிவாழம் மிக்க கருத்துக் கோர்வை, அணுகுவதற்கான எளிமை நலன்கள், உள்ளிட்ட குணாம்சங்ளுடன் விளங்கியமையால், அவற்றிற்கு நல்லதோர் பெயரையும் காலங்கடந்து நிலைத்து நின்று பயணிப்பதற்கான தன்மை நலன்களையும் உலகளாவிய நிலையில் ஏற்படுத்தித் தந்திருக்கின்றன. இவ்விதத்திலான படைப்பிலக்கியங்கள் தத்தம் தேசங்களிலும் உருவாக்கப்படுதல் வேண்டும் என்கிற எழுச்சியானது, கிளர்ந்தெழுந்த சூழலில்தான் செவ்வியல் என்னும் கோட்பாடு உருவாவதற்கான அடித்தளம் எழுப்பட்டிருக்கிறது.

பொதுவாக, செவ்வியல் என்பதற்குக் குறிப்பிட்ட ஒரு நாகரிகம், மொழி, கலை - இலக்கியங்களின் மிக உயர்ந்த முதிர்ச்சி பெற்ற மற்றும் காலங்கடந்தும் நிலைத்து நிற்கிற தன்மைகளின் ஒருங்கிணைவு எனப் பொருள் தரப்படுகிறது. இத்துடன் இச்சொல் சமநிலை, ஒழுங்கு, தெளிவு மற்றும் ஆழமான பாண்டித்யம் மிக்க படைப்புகளையும் குறிக்கும்.[4] என்றும் சுட்டப்படுகிறது.

இவ்வரிசையில், செவ்வியல் என்னும் இச்சொல்லாட்சி பற்றிக் கூடுதலாக விளக்க முற்படும் போது, இலக்கியப் படைப்பு ஒரு நூலாக அதன் போக்காலும் சாதனையாலும் உயர்ந்து நிற்பதைச் சுட்டவும், தகுதி வாய்ந்த இலக்கிய நூல்களைக் குறிப்பிடவும் செவ்வியல் என்னும் சொல்லாட்சி பயன்பட்டு வருகிறது என்றும், பொதுவாக, சமன் செய்யும் முறை, நிறைவு, ஒருமைப்பாடு, அளவுத் திட்டம், கட்டுப்பாடு, உயரிய படைப்பு நெறிகள் ஆகிய பண்புகளைக் கொண்ட இலக்கியப் படைப்பாக்கங்களைச் சுட்டிக்காட்டுவதற்கும் செவ்வியல் என்னும் இச்சொல்லாட்சி தற்போது இலக்கியத் திறனாய்வாளர்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது[5] என்றும் விளக்கம் தரப்படுகிறது. ஆனாலும், மேற்கத்திய மரபைப் பொறுத்தவரையில் கிளாசிசம் என்பது தொன்மைக்கால கலை - இலக்கிய உருவாக்கங்களின் 'மாதிரி'யையும், அந்த 'மாதிரி'களின் அடிப்படையில் உருவாக்கப்படுகிற ஆக்கங்களைப் பற்றியும் வரையறை செய்து தருவது[6] என்றும் விளக்கம் தரப்படுகிறது.

## செவ்வியல் - தோற்றமும் வளர்ச்சி நிலைகளும்

கலை - இலக்கியம் மற்றும் கட்டடக் கலைத் துறைகளின் வாயில்களாக முகிழ்த்து, படைப்பாக்க மறுமலர்ச்சிக்கு வித்திட்டதாகக் கருதப்படுகிற செவ்வியலானது, கி.மு.ஐந்தாம் நூற்றாண்டு கால வாக்கில் கிரேக்க, ரோமானிய தேசங்களில் உருப் பெற்று, கி.பி.14ஆம் நூற்றாண்டில் இத்தாலியில் நிலைபெற்றது. பின்னர். 18ஆம் நூற்றாண்டு காலப் பகுதியில் இங்கிலாந்து, ரஷ்ய தேசங்களில் உள் நுழைந்து, பின்னர், உலகம் முழுவதும் பரவலாயிற்று. பிதாகரஸ், ப்ராடிகஸ், ஹிப்பியாஸ், சாக்ரடீஸ் ஆகியோர் தொடக்கக் காலச் செவ்வியலின் முன்னோடிகளாக கருதப்படுகிற வேளையில், இத்தாலியின் பாடிஸ்டா ஆல்பர்ட்டி, பிரான்சின் நிக்கோலஸ் பூஸின், பிரான்சுவா மான்ஸார்ட், இங்கிலாந்தின் ஜான் ட்ரைடன், அலெக்சாண்டர் போப், ஜெர்மனியின் கால்டோல்ட் எப்ரய்ம் லெஸ்ஸிங், ஜோஹன் உல்ப்காங்க் வான் கதே, பிரெடரிக் ஷில்லர், ருஷ்யாவின் அலெக்சாண்டர் சுமரோ கோவ், நிகோலாய் மிகைலோவிச் கரம்ஸின் உள்ளிட்டோர் பிற்காலச் செவ்வியல் கோட்பாட்டின் சிந்தனையாளர்களாகஅறியப்படுகின்றனர்.

## செவ்வியலின் அடிப்படை அம்சங்கள்

செவ்வியற் கோட்பாடானது அதன் பன்முகத் தன்மைகளுக்கு ஏற்ப, பலவிதப் பண்புநலன்களைக் கொண்டதாகக் காணக் கிடைக்கிறது. குறிப்பாக, முன்னை மரபியல் எனப்படுகிற செவ்வியலானது, சமயப் பார்வை உடையதாய், மரபு தழுவியதாய், அறிவாழம் மிக்கதாய், வளர்ச்சியற்றதாய் இருப்பதாகும். இது, தனி மனிதர்களுக்கு இடையிலுள்ள வேறுபாடுகளைக் காட்டிலும், மனிதர்களின் பொதுவான குணாம்சங்களைக் காட்டும் முறையில், சமுதாயம் தழுவியதாய் அமைகிறது. இணையற்ற பொது விதிகளுக்குள் அடங்காத, விசித்திரமான தனி மனிதர்களைக் காட்டிலும், அடிப்படை மனித மாதிரிகளைக் (Types) காட்டுவது முன்னை மரபியலின் இலக்கணங்களில் சிறப்பானதாகும்[7]

இந்த ‘முன்னை மரபியல் வாதம்’ (Pre & Classicism) சமூக மரபைப் பின்பற்றுவது, புதிதாக உள்ளதை எளிதாக ஏற்காது. சமூகம் தழுவிய சிந்தனைகளை இது வலியுறுத்துகிறது. சமூகத்தின் பொது மரபு எதுவோ, அதையே தொடர்ந்து பிரதிபலிக்க வேண்டும் என இது வலியுறுத்துகிறது.[8]

மரபு வழிக் கலை-இலக்கியங்களிலிருந்து உருவாக்கப்பட்ட செவ்வியலானது, தனது தோற்றத்திற்குப் பின்பான இலக்கியப் படைப்பு முறைகளைத் தானே ஒருவாறு வடிவமைக்க வழிகோலாகவும் அமையலாயிற்று. இதன்வழி அமைவுற்ற இலக்கிய ஆக்கங்களின் தன்மைகள் பின்வருமாறு அமையலாகின்றன.

செவ்வியல் இலக்கியங்கள் என்பன, அன்றாட வாழ்வு பற்றியன; மிகைப் படுத்தப்படாத எளிய மானுடர்களே இவற்றின் நாயகர்கள்; மனிதன், மனிதனே அன்றி கடவுளாக இரான்; வாழ்வியல் மரபுகளும் சமூக ஒழுங்கமைப்புகளுமே மனிதனிடமிருந்து நாகரிக நடத்தையை வரவழைக்க முடியும் என்பன செவ்வியல் வாதத்தின் அடிப்படை.[9] சமூகத்தில் மனித வாழ்வு பற்றி நிலவுகிற கோட்பாடுகளே இலக்கியத்தில் செவ்வியல் சிந்தனைகளாக இடம்பெறுகின்றன. இலக்கியம் காட்டுகிற மானுடச் சித்திரிப்பு என்பது இக்கோட்பாட்டிற்கு ஏற்பவே அமையலாகும். இவ்விதத்தில், மகோன்னதமான ஒரு மேம்பாடு (Excellence), செம்மாந்த குறிக்கோள் (Value), சிறந்த ஒரு நிலைபேறு (Permanence) என்கிற மூன்றின் அடிப்படையில் சிறந்து விளங்கும் இலக்கியங்கள் செவ்வியல் இலக்கியங்கள் ஆகும்[10] என்பதும், செவ்வியல் தாக்கம் பெற்ற இலக்கிய ஆக்கங்களில் ஒரு தெளிவு இருக்கும் மகோன்னதமான வாழ்வானது வலியுறுத்தப்படும்; பொதுமைப் பண்பு இருக்கும்; தனிப்பட்ட ஒன்றில் ஆசையும்

அபிலாசையும் இருக்காது. மனித சமுதாயத்தின் பொதுப் பண்புகளை வலியுறுத்தி, தற்சார்பு நிலையின்றி, பொதுச் சார்பு நிலையுடன் விளங்கும். காலங்கடந்து, இனம் கடந்து, எப்போதுமே வாழ்கிற நிலை பெற்றிருக்கும்[11] என்பவும் இதன் அடிப்படை அம்சங்களாகக் கொள்ளப்படுகின்றன.

## தமிழ் நாவல்களில் செவ்வியல் கூறுகளின் இழைவுகள்

செவ்வியல் என்னும் கோட்பாடானது, மேற்கத்தியப் பிரதேசங்களில் முகிழ்த்து, உலகளாவிய அளவில் விரிவாக்கம் பெற்றிருப்பதைப் போன்றே, அதன் தாக்கமும் செல்வாக்கமும் உலகத்தின் அனைத்து வகை இலக்கியப் படைப்பாக்கப் பிரதிகளிலும், எவ்விதத் தங்குதடையுமின்றி ஊடாடியே காணக்கிடைக்கின்றன எனலாம். குறிப்பாக, கிரேக்கக் காவியங்களான ஹோமரின் இலியட், ஒடிசி ரோம தேசக் காவியமான விர்ஜிலின் அனீட் என்பனவற்றைச் செவ்வியல் கோட்பாட்டுத் தன்மைகள் வாய்ந்த காவியங்கள் எனச் சுட்டுவர். இவ்வரிசையில், இங்கிலாந்து தேச ஜேன் ஆஸ்டினின் 'கர்வமும் முன் முடிவும்' (Pride and Prejudice), ஷேக்ஸ்பியரின் 'ஹேம்லட்', ஜார்ஜ் ஆர்வெல்லின் '1984', ருஷ்ய பியோதர் தாஸ்தாயேவ்ஸ்கியின் 'குற்றமும் தண்டனையும்', பிரெஞ்சு தேச விக்டர் ஹியூகோவின் 'ஏழை படும் பாடு' (Les Miserables) என்பனவற்றையும் பிற்காலச் செவ்வியல் இலக்கியப் படைப்புகளாகப் பாவிப்பர். இவ்வரிசையில், உலகச் செம்மொழிகளில் ஒன்றான தமிழ் மொழியில் உள்ள மரபுவழிப்பட்ட 41 நூல்களைச் செவ்விலக்கியத் தன்மைகள் கொண்டனவாக கொள்ளப்படுவதுடன், நவீனத் தமிழ் நாவல் இலக்கியப் படைப்புகளில் சிலவும் செவ்விலக்கியப் பிரதிகளாக அடையாளம் காட்டப்படுகின்றன. இவ்வரிசையில், தொடக்க காலத்தில் தமிழில் எழுதிய மாயூரம் வேதநாயகம்பிள்ளை, கல்கி, அகிலன், நா.பார்த்தசாரதி, மு.வரதராசன் உள்ளிட்ட படைப்பாளர்களின் சில நாவல்களில் இவ்விதத் தன்மைகள் வெகுவாக உள்ளமையைக் காணமுடிகிறது.

பொதுவாக, காலத்தைக் கடந்து நிற்கும் ஆற்றலையும், போற்றிப் பாது காக்கத் தக்க இலக்கிய மேன்மையயும், உயர்தரத் தகுதி நலன்களையெல்லாம் ஒட்டுமொத்தமாகப் பெற்றதன்மையையும், மிக ஆழமாக வாசித்து அறிவதற்கான கருத்தாம்சங்களையும், அனைத்துக் காலகட்டங்களுக்கும் பொருந்தக்கூடிய வாழ்வியல் விழுமியங்களையும் ஒருங்கே கொண்டு, சமூக நலனை மட்டுமே முக்கிய நோக்கமாக உள் வாங்கிப் பிரதிபலிப்புறும் இலக்கிய ஆக்கங்களையே செவ்வியல் பிரதிகளென அங்கீகரிப்பர். இந்தவகையில், தன்னேரில்லா தலைமகளை, எக்கால கட்டத்திற்கும் பொருந்துகிற அறநெறிகளை, அன்றாட வாழ்வியலுக்கு வசப்பட்டு வருகிற கருத்தாம்சங்களை எல்லாம், தம் புனைவு வெளியில் உள் வாங்கியிருக்கிற விதங்களில் மாயூரம் வேதநாயகம் பிள்ளையின் 'பிரதாப முதலியார் சரித்திரம்' என்னும் தமிழின் முதல் நாவல் ஒரு செவ்விலக்கியப் பிரதியாகத் தோற்றம் தருகிறது.

தான் பெற்றிருந்த அறவியல் நடத்தை, தான் கொண்டிருந்த நீதி தழுவிய வாழ்வியல் அனுபவங்கள் என்கிற இவையெல்லாவற்றையும் புனைவாக்கித் தன்வரலாற்றுத் தன்மை நலன்களுடன் வேதநாயகம் பிள்ளையால் படைத்துத் தரப்பட்டுள்ள நாவல்தான் பிரதாப முதலியார் சரித்திரம் என்பது. இது பெயரளவில்தான் பிரதாபன் என்னும் ஒரு ஆண் மகனின் சரித்திரமே தவிர, மற்றபடி ஒப்பாரும் மிக்காரும் இல்லாத ஞானாம்பாள் என்னும் ஒரு பெண் பிள்ளையின் சரித்திரமாகவே ஆக்கம் பெற்றிருக்கிறது. இந்நாவலின் கதைக் களமானது, திவான் பரம்பரையில் பிறந்த

பிரதாப முதலி என்னும் ஒரு நபரின் பூர்விகம் தொடங்கி, அவனின் பிறப்பு, வளர்ப்பு, கல்வி பெறல், திருமணம், குடும்ப வாழ்வு மற்றும் அவற்றின் வழிப் பெறலாகிற துன்ப, இன்பங்கள், தோல்வி - வெற்றிகள் என்பனவற்றைச் சுட்டி, மிகச் சாதாரண கதைப் பாணி என்கிற வகையில் மட்டுமே விரிந்து நிறைகிறது. எனினும், இப்படைப்பாளரின் ஒருவித மெனக்கெடலின் நிமித்தம், சமூக மேன்மைகளை மட்டுமே தம் வாழ்வியல் நோக்காகக் கொண்டிருக்கிற ஞானாம்பாள், சுந்தரத்தண்ணி உள்ளிட்ட வகை மாதிரிப் பாத்திரங்களையும், அனைத்துக் காலகட்டங்களுக்கும் பொருந்துகிற அறநெறி சார்ந்த கருத்தாடல்களையும் ஒருங்கிணைத்துச் சித்திரித்துள்ள வகையில் இது செவ்வியல் தன்மை கொண்ட ஒரு பிரதியாக, உருக்காட்டத் தொடங்கி விடுகிறது.

ஒரு செவ்வியல் பிரதியின் மைய மாந்தர்கள் என்போர், முன்னுதாரணம் காட்டத்தக்க விதத்தில் அமைக்கப்படுவது மரபு. அது ஞானாம்பாள், சுந்தரத்தண்ணி பாத்திரங்களின் வழி இந்நாவலில் சாத்தியப்பட்டிருக்கிறது. குறிப்பாக, இந்நாவலின் மைய மாந்தர்களாகச் சித்திரிக்கப்பட்டுள்ள ஞானாம்பாளும், சுந்தரத்தண்ணியும் உறவால் முதன்மை மாந்தரான கதை நாயகனின் மனைவியும் தாயுமாவர். ஆனால், ஆளுமைத் திறன்களால் அவருக்கு நேர் எதிரான உயர் திறன்களைக் கொண்டு விளங்குபவர்களாகக் காட்டப் பட்டிருக்கின்றனர். இவ்விதத்தில், இம்மங்கையர் இருவரும் உயர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்; அனைத்து வித நற்பண்புகளையும் குறைவறப் பெற்றவர்கள்; உலகத்தில் உள்ள அனைத்துப் பெண்களுக்கும் முன்னுதாரணம் காட்டத்தக்க இலட்சணங்கள் பொருந்தியவர்கள்; வாழ்வில் பலவித நெருக்கடிகளைச் சந்திக்கும் சந்தர்ப்பங்களிலும் கூட இவர்கள் உயர் குணங்களுடன் நடந்து கொள்பவர்கள்; எல்லா சூழ்நிலைகளிலும் நீதியையும் மானுட தர்மங்களையும் காப்பவர்கள்; தேசத்தையோ, குடும்பத்தையோ நிர்வகிக்கிற வாய்ப்புகள் கிடைக்கும் பட்சத்தில் மகோன்னத சக்திகளைப் பெற்று, புத்தி சாதுர்யங்களுடனும் திறமைகளுடனும் ஆட்சி புரிபவர்கள் என, ஒப்பாரும் மிக்காரும் இல்லாத நபர்களாக, வகை மாதிரி மாந்தர்களாகப் படைக்கப்பட்டுள்ள விதங்களில், இந்நாவல் ஒரு செவ்வியல் பனுவலாக ஆக்கம் பெற்றிருக்கிறது. இதற்கு, ஞானாம்பாளின் ஆளுமை பற்றி அவளின் கணவன் பிரதாபனின் கூற்றாக அமையும் ஒரு பகுதி, இவ்விடத்துச் சான்று காட்டத்தக்கது. மகாராஜாவாகிய ஞானாம்பாளும் உபராஜாவாகிய நானும் சிங்காசனம் ஏறி, ராஜ்ய பரிபாலனம் செய்யத் தொடங்கினோம். செங்கோல் கோணாமலும், மனுநீதி தவறாமலும், வர்ண சாரங்கள் பேதிக்காமலும், மாதம் மும்மாரிப் பெய்யவும், முப்போகம் விளையவும், ஆறில் ஒரு கடமை வாங்கி அரசாட்சி செய்தோம். முந்திய அதிகாரத்தில் விவரித்தபடி, ராஜாக்கள் பிரஜைகளுக்குச் செய்ய வேண்டிய அனுகூலங்களையெல்லாம் குறைவறச் செய்தோம். தேவாலயம், தர்மசத்திரம், பாடசாலை, வைத்தியசாலை, பல தொழிற்சாலைகள் முதலியவைகளில் பழமையாய் இருந்தவைகளையெல்லாம் புதுப்பித்தோம்[12] என்பதாக விவரணை பெறலாகிற அப்பகுதி ஞானாம்பாளின் தனித்துவங்களை வெளிப்படுத்துவதாக அமைந்திருக்கிறது.

மேற்காட்டியமை போன்றே, இந்நாவலின் மற்றொரு மாந்தராகப் படைக்கப்பட்டிருக்கிற சுந்தரத்தண்ணி என்னும் மாந்தரின் ஆளுமையும் கூட வகை மாதிரி காட்டத்தக் கதாகவே உள்ளது. குறிப்பாக, இந்நாவலின் ஓர் இடத்தில் சித்திரிக்கப்பட்டிருக்கிற ஒரு நிகழ்வு இதற்குச் சான்று காட்டத்தக்கது. பொதுவாக தமிழ்ச் சமூக வாழ்வியல்

நடைமுறையில் மாமியார், மருமகள் என்கிற உறவுமுறையானது, என்றுமே இருமை எதிர்வுகளுடன் மட்டுமே செயல்படும் என்றே சொல்லப்பட்டு வருகிறது. இதற்கு மாற்றாக, இந்நாவலில் ஒரு நிகழ்வு இடம்பெற்றிருக்கிறது. அது, மாமியார், தன் மருமகளான சுந்தரதண்ணியைப் பற்றி அவரின் பேரனிடம் விதந்து பேசுகிற ஓரிடம்.

உன் தாயாரைப் போலச் சர்வ குணாலங்கிருத பூஷணிகள் உலகத்தில் இருப்பார்களா? அவள் எனக்குச் செய்யும் அன்பும் ஆதரவும் வணக்கமும் மரியாதையும் யாருக்காவது வருமா? எனக்கு நூறு புத்திரிகள் இருந்தாலும் இந்த விருத்தாப்பிய காலத்தில் என் மருமகளைப் போல என்னை ஆதரிப்பார்களா? நான் வியாதியாய் இருக்கும் காலங்களில் எனக்குப் பத்திய பாகங்கள் செய்து கொடுத்து உன் தாயாரே எனக்குச் சகலப் பணிவிடைகளும் செய்து வருகிறாள். அவள் இல்லாவிட்டால் நான் செத்த இடம் புல் முளைத்துப் போயிருக்கும். அவள் அன்னமில்லாதவர்களுக்கு அன்னமும், வஸ்திரமில்லாதவர்களுக்கு வஸ்திரமும் கொடுத்து எத்தனையோ ஏழைக் குடும்பங்களைக் காப்பாற்றி வருகிறாள். அவளுக்காகத்தான் மழையே பெய்கிறது. அவளுக்காகவே வெயில் எரிக்கிறது. அவளுக்குக் கடவுள் நீடித்த ஆயுளைக் கொடுத்து, உனக்கும் எனக்கும் என்னுடைய மகனுக்கும் மற்ற ஏழைகளுக்கும் அவள் ஆதரவாய் இருக்கும்படி, கிருபை செய்ய வேண்டுமென்பது என்னுடைய இடைவிடாத பிரார்த்தனையாய் இருக்கிறது[13] என்பார்.

மேற்காட்டிய கூற்று நிலை, இதுவரை வழக்கத்தில் இல்லாத வகையிலும், பழைய நடைமுறைகளுக்குப் புத்துணர்வு அளித்துள்ள விதத்திலுமாக அமைந்துள்ள நிகழ்வுகளைச் சுட்டுவதால், இதன்வழி ஒருவிதச் செவ்வியல் தன்மைகளைக் குறிப்பிட்ட மாந்தர்கள் பெற்றுள்ளதாக அவதானிக்க இயலும்.

நவீனத் தமிழ்ப் புனைகதைப் படைப்புகளின் வழி, அறம், நீதி, தர்மம், நியாயம், ஒழுக்கம் உள்ளிட்ட செல்நெறிகளைச் சமூகத்திற்குக் கடத்த வேண்டும் என்கிற நோக்கு கொண்டு செயலாற்றியவர்களுள் வேதநாயகம் போன்றே மு.வரதராசன் சான்றுகாட்டத் தக்கவராகவும் இருக்கிறார். இத்துடன் இவர் ஒரு கல்வியாளராக இருந்தும் கூடப் புனைகதைப் படைப்பு நிகழ்வில் சிறிது வெற்றி பெற்றவராகவும் காணக் கிடைக்கிறார். இவ்விதங்களிலேயேதான் இவர் படைத்துள்ள இரு சிறுகதைத் தொகுப்புகள் மற்றும் 13 நாவல்களும் கூடக் காணப்படுகின்றன. இவற்றுள், செவ்வியல் தன்மை நலன்களைச் சற்றுக் கூடுதலாக உள்வாங்கியுள்ள பிரதியாக இவரின் 'அகல் விளக்கே' காணக் கிடைக்கிறது.

வேலய்யன், சந்திரன் என்கிற பள்ளிப் பருவ நண்பர்களின் புற வாழ்நிலையையும், அகமன உலகையும் சித்திரித்து, அவர்களின் வளர்ச்சி - வீழ்ச்சியை, வெற்றி - தோல்வியை, உறவின் இணக்கம் - இன்மைகளை விவரித்து, இறுதியில் நல் அழகும், கூர்மையான அறிவும் பெற்றிருப்பினும் கூட செருக்கும், தீ நடத்தையும் திமிரும் கொண்டிருப்பவர் வாழ்வில் வீழ்ந்து போவதும், அறிவால், திறனால் சற்றுப் பின்தங்கியே இருப்பினும் கூட, பண்பால், பழகும் விதங்களால், உதவும் குணத்தால் மேன்மை பெற்றிருந்தால் அவர் ஒரு அகல் விளக்கு போலப் பிறரின் வாழ்வில் ஒளி ஏற்றுபவராகவே திகழ்வர்; பிறரால் மதிக்கவும் பெறுவர் என்று உணர்த்தி நிறைகிறது இந்நாவல்.

'அகல் விளக்கு' என்னும் இந்நாவலில் நற்பண்புகளையும் திறன் குறைவையும் பெற்றிலங்கும் வேலய்யனிடம், அழகிய உடலையும் அகந்தை கொண்ட மனதையும் ஒருங்கே பெற்றாடும் சந்திரன்; இறுதியில், ஒழுங்கற்ற வாழ்நிலை நடத்தைகளால் சீரழிவுற்று, தொழு நோய்க்காட்பட்டு உழன்று, இறுதியில் உயிர் விடப் போகும் நிலையில் வெளிப்படுத்தும் கருத்து நிலையானது

இந்நாவலின் மையப் பொருண்மையாக அமையப் பெறுகிறது. அது, வேலய்யா, நீ மண் அகலாக இருந்த காலத்தில் நான் பித்தளை அகலாக இருந்தேன். சிறிது காலம் பளபளவென்று மின்னினேன். என் அழகையும் அறிவையும் அப்போது எல்லோரும் விரும்பினார்கள்; பாராட்டினார்கள். என்ன பயன். வரவர எண்ணெய் கெட்டது. திரியும் தீய்ந்தது. சிட்டமும் பிடித்ததும். ஒளி மங்கியது. மங்கி விட்டேன். நீயோ நேராக சுடர் விட்டு அமைதியாக எரிந்தாய், இன்றும் சுடர் விட்டு எரியும் ஒளி விளக்காக உள்ளாய்[14] என்று சந்திரன் பேசுவதாக அமைகிறது.

அகல் விளக்கு என்னும் நாவல் மனிதப் பண்புகளின் மேன்மையை, ஒழுக்கத்தின் உயர்வை வலியுறுத்துவதையே தன் மைய நோக்கமாகக் கொண்டு, குறிப்பாக ஒட்டு மொத்த ஒழுங்குகளையெல்லாம் ஒன்றாகப் பொருந்திப் போயிருக்கிற வேலய்யன் என்னும் மாந்தரைப் படைத்துக் காட்டி, இச்சமூகத்திற்கு ஒரு வகை மாதிரி மாந்தரைப் புனைந்து நிலைப்படுத்தியுள்ள விதங்களில், ஒரு செவ்வியல் புனைவாக தன்னை நிலை நிறுத்திக் கொள்கிறது.

வேதநாயகம் பிள்ளையின் ஞானாம்பாள், உயர் ஒழுக்கத்திற்கும், சுந்தரத்தண்ணி, தனித்துவப் பண்பு நலன்களுக்கும், மு.வ.வின் வேலய்யன் பிறருக்காக வாழ்கிற நன்னடத்தைக்கும் வகை மாதிரி மாந்தர்களாக அமைய, நா.பார்த்தசாரதியின் ‘குறிஞ்சி மலர்’ நாவலில் இடம்பெறுகிற அரவிந்தனோ, சமூக மேம்பாட்டைக் கோருகிற தனித்துவ மானுடனாகப் புனையப் பெற்றிருக்கிறான்.

குறிஞ்சி நிலக் கடவுள் பள்ளி கொண்டுள்ள மதுரையின் திருப்பரங்குன்றத்தில் தொடங்கி, குறிஞ்சி பூக்கும் நிலமாகிய கோடைக்கானலில் முடிகிற விதத்தில் அமைக்கப்பட்டிருக்கிற குறிஞ்சி மலர் என்னும் இந்நாவலின் கதையானது, பூரணி, அரவிந்தன் என்கிற இருவரைத் தமிழகத்துப் பெண்மை, ஆண்மைகளுக்கு விளக்கமாகும் அழகிய தத்துவங்களாக நிலைக்கும்படி,15 படைப்பாளியால் அமைக்கப்பட்டுள்ள விதத்தில், தனித்துவம் பெறுவதாக உள்ளது. இந்நாவலின் மைய மாந்தராகச் சித்திரிப்பு பெற்றிருக்கிற அரவிந்தன் என்பான், எளிமையை விரும்புகிற பண்பாம்சமும், சமுதாய நலன்களை மட்டுமே தன் வாழ்வியல் நோக்காகக் கொண்டு செயலுறும் தொண்டுள்ளமும் கொண்டு படைக்கப் பட்டுள்ள விதங்களில் இப்பாத்திர வார்ப்பானது செவ்வியல் தன்மையை எய்தியிருக்கிறது. இவற்றுக் கெல்லாம் பொருந்துகிற ஓர் உதாரணமாக இந்நாவலின் பின்வரும் ஒரு பகுதி அமைந்திருக்கிறது,

அரவிந்தன், அழகன், அறிஞன், கவிஞன், சாமர்த்தியன்; இவை எல்லாம் இணைந்த ஒரு குணச் சித்திரன், பார்த்தவுடன் பதிந்து விடுகிற கவரும் தன்மை வாய்ந்தவன் எளிமையை எல்லாவற்றிலும் விரும்புகிற சுபாவம் உள்ளவன். தமிழ்நாட்டின் சூழ்நிலையே எளிமைக்கு ஏற்றது என்று வாதிடுபவன். இது ஏழைகளின் தேசம். இங்கே ஒவ்வொருவரும் குறைவான வசதிகளை அனுபவிப்பதோடு, மற்றவர்களுக்கு விட்டுக் கொடுக்கத் தயராய் இருக்க வேண்டும் என்று அடிக்கடி புன்னகையோடு கூறுபவன், காந்தியக் கொள்ககளைப் போற்றுவதில் விருப்பமும் மதிப்பும் கொண்டிருப்பவன். எந்த வேலையை, எப்போது, எப்படிச் செய்ய வேண்டும் என்பது அரவிந்தனுக்கு அத்துப்படி. அவனுக்கு நல்ல முகராசி உண்டு. சுறுசுறுப்பு ஒரு நல்ல மூலதனம். அரவிந்தனிடம் அது குறையாமலேயே இருந்தது. அவனால் எதையும் செய்யாமல் ஒரு வினாடி கூட இருக்க முடியாது. அப்படி ஒரு கூர்மை. அப்படி ஒரு சுறுசுறுப்பு[16] என விவரணை பெறும் பகுதிகள், அரவிந்தன் என்னும் ஒரு தனிமனிதனைச் சமூகத்திற்கான வகை மாதிரி மனிதனாக மாற்றி இந்நாவல் காட்டியிருக்கிறது. தன் சிறுவயதிலேயே பெற்றோரை இழந்து, தன்

முயற்சியால் மட்டுமே படித்து, உழைத்து, முன்னேறி, சமூகத்தின் நன் மதிப்பையும், அழகிய பெண்ணின் நன் மனதையும் பரிசாகப் பெற்றிருப்பினும் கூட, தம் வாழ்வில் சுயநலனுக்கு என்றுமே இடமில்லை; தன் வாழ்வு எல்லாமே பொதுநலனுக்கு மட்டுமே என்கிற கொள்கையின் பிடிமானத்தால் இயக்கமுறும் அரவிந்தன், இறுதியில் பிறர் உயிர் காக்கவெனத் தனது உயிரையே இழந்து விட நேரிடினும் கூட, ஒரு முன் மாதிரி மானுடனாகவே இந்நாவலில் இடம் பெற வைக்கப்படுகிறான். என்கிற விதத்தில் இப்படைப்பு ஓர் ஒப்புமை காட்டவியலாததாகவும், இதில் இடம்பெறுகிற மைய மாந்தரை உயர் பண்புகளையும் கொண்ட மாந்தராகக் கட்டமைக்க முயன்றுள்ள விதத்தில் இது ஒரு செவ்விலக்கியப் பிரதியாக உருமாற்றம் கொண்டிருக்கிறது.

**நிறைவாக**

காலந்தோறும் கலை மற்றும் இலக்கியப் படைப்பாக்கச் செயல் நிகழ்வுகளில் தொடர்ந்த மாற்றம் ஏற்படுதல் என்பது இயல்பு. இது அவ்வக் காலகட்டத் தேவையினை அடிப்படையாகக் கொண்டே அமைகிறது. ஏதேனும் ஒரு காலகட்டத்தில் தோன்றிய படைப்பிலக்கியத்தின் செய்முறை, கால நகர்வில் பிறரின் ஏற்புத் தன்மையைப் பெற்று நிலைபேறு அடையும் போது, அக்குறிப்பிட்ட இலக்கியம் சார்ந்த சிந்தனைத் தொகுப்பாகவே அது சட்டகம் பெறுகிறது. பிற்பாடு, இவ்வித இலக்கிய வகைமையை அணுக இச்சட்டகமே பின்புலமாக நின்றும் செயலாற்றுகிறது. இதே போன்று, ஏற்கனவே உருப்பெற்றிருக்கிற ஏதேனும் ஒரு கொள்கையோ, கோட்பாடோ, தத்துவமோ குறிப்பிட்ட ஒரு படைப்பிலக்கியத்தை உருப்பெறச் செய்வதற்குப் பின்னணியாக இருந்து செயலாற்றுவதும் கூட தொடர்ந்து நடந்து வருகிறது. இவ்விருவிதச் செயல்நிகழ்வுகளின் போதுதான் படைப்பும் கோட்பாடும் ஒன்றிலொன்று பிணைவுபடுகின்றன.

பொதுவாக, மனித உணர்வுகள் மற்றும் வாழ்வியல் நடைமுறைகளைக் கலை நயத்துடன் வெளிப்படுத்தும் போது, அது ஓர் இலக்கிய ஆக்கமாகப் பரிணமிக்கிறது என்பதும், ஒரு துறையில் குறிப்பிட்ட ஒரு கருத்து நிலையை விளக்கி வரைய சில தர்க்கப் பூர்வமான சான்றுகளைக் கொண்டு நிறுவிடும் ஒருவிதச் சிந்தனா முறையையே கோட்பாடு என்று சுட்டி அழைப்பதும் பொது வழக்கம். இவ்விதங்களில் உருப்பெற்றுள்ள கோட்பாடுகளுள் தொடக்க காலத்தைச் சேர்ந்த ஒன்றுதான். ‘முன்னை மரபியல்’ எனப் பெயர்சூட்டி அழைக்கப்படுகிற ‘செவ்வியல்’ என்னும் சிந்தனாவாதம். இது, கிரேக்க - ரோமச் சிந்தனா முறைமைகளிலிருந்து ஒப்பற்ற, உயர்தர இலக்கிய வகைமைகளைச் சுட்டிடவெனப் பொது ஏற்பினைப் பெற்று, உருப்பெற்றிருப்பதுடன், உலகளாவிய கலை - இலக்கியங்களின் முதிர்ச்சி பெற்ற சிந்தனைத் தொகுப்பாகவும், காலங்கடந்தும் நிற்கக் கூடிய கலைத் தன்மைகளின் ஒருங்கிணைப்பாகவும் திகழ்கிறத் தன்மைகளையும் தன்னகங் கொண்டதாக இருக்கிறது.

அடிப்படையான மனித மாதிரிகளை வடிவமைத்து, நிலைப்படுத்திட முனைகிற செவ்வியலானது, தான் தோன்றிய இடங்களோடு மட்டுமன்றி, உலகத்தின் அனைத்துப் பரப்புகளிலும் கலை - இலக்கிங்களின் வாயிலாகப் பரவி, நடப்புக் கால நவீன காலகட்டத்திலும் கூடப் புனைவிலக்கியப் பிரதிகளின் வழி நிலை கொண்டிருப்பதென்பது இதனுடைய தனிச் சிறப்பாகவே பாவிக்கப்படுகிறது. இச்சிந்தனையின் தாக்கமானது நவீனத் தமிழ் நாவல்களிலும் கூட இழையோடியிருப்பதை, தமிழின் தொடக்க காலப் படைப்புகள் பலவும் வெளிக்காட்டித் தருகின்றன. குறிப்பாக, செவ்வியல் படைப்பின் மாந்தர் என்போர் முன்னுதாரணம் காட்டத்தக்கதான பண்பு

நலன்களுடன் மிளிர்வர் என்பதற்குப் பிரதாப முதலியார் சரித்திரம், அகல் விளக்கு, குறிஞ்சி மலர் என்கிற நாவல்களில் சான்றுகளாகின்றனர். என்கிற விதங்களில் பார்க்கும் போது, அனைத்துக் கால கட்டங்களுக்கும், அனைத்து நிலவெளிகளுக்கும் இயைந்து போகிற ஒரு சிந்தனாவாதமாகக் காணக் கிடைப்பதுதான் 'செவ்வியல்' என்னும் இக்கோட்பாடு என்பது நிரூபணமாகிறது.

## சான்றெண் விளக்கக் குறிப்புகள்

1. பா.ரா.சுப்பிரமணியன்(மு.ஆ.),க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, க்ரியா, சென்னை முதல் பதிப்பு -1992, ப.381.
2. wikipedia+2.
3. பா.ஆனந்தகுமார், பாரதியார் - ஆசான் - அப்பாராவு கவிதைகளில் புனைவியல், முத்து மீனா பதிப்பகம், மதுரை, முதற்பதிப்பு மே, 2000, ப.82.
4. செவ்வியல் வாதம் - Google Search.
5. வை.சச்சிதானந்தம், மேலை இலக்கியச் சொல்லகராதி, மேக்மில்லன், சென்னை, முதற் பதிப்பு - 1983, ப.35.
6. எம்.ஜி.சுரேஷ், இஸங்கள் ஆயிரம், புத்தாநத்தம், திருச்சி, முதல் பதிப்பு, 2005, ப.34.
7. ந.பிச்சமுத்து, இலக்கிய இயக்கங்கள், சக்தி புத்தக நிலையம், சென்னை, மூன்றாம் பதிப்பு, 2006, ப.20.
8. அரங்க. சுப்பையா, இலக்கியத் திறனாய்வு - இஸங்கள், கொள்கைகள், பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை, எட்டாம் பதிப்பு, 2016, ப.318.
9. சிவ.மங்கையர்க்கரசி, இலக்கிய இயக்கங்கள் - தமிழிலக்கியத்தின் சமூக வரலாறு, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004, ப.13.
10. ச.அகத்தியலிங்கம், சங்க இலக்கியங்கள் செவ்வியல் இலக்கியங்களே, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2000, ப.85.
11. சிவ.மங்கையர்க்கரசி, முந்நூல், ப.15.
12. மாயூரம் வேதநாயகம் பிள்ளை, பிரதாப முதலியார்சரித்திரம், சந்தியாபதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு 2004, ப.298.
13. மேலது, ப.79.
14. மு.வரதராசன், அகல் விளக்கு, பாரி நிலையம், சென்னை - 13, ஒன்பதாம் பதிப்பு, 1995, ப.404.
15. நா.பார்த்தசாரதி, குறிஞ்சி மலர், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, இருபதாம் பதிப்பு, 2004, ப.6.
16. மேலது, பக். 82-86.